மேலும், உலகளாவிய போட்டிமிகு நிலமைகள் மற்றும் சவால்களுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமான ஊழியர் படையணியை உருவாக்குவது இந்தத் திணைக்களத்தின் அடிப்படையான பொறுப்பாகும். “உலக மட்டத்தில் இலங்கையின் ஊழியர் படையணி” என தனது நோக்கை தயாரித்துள்ள திணைக்களம் நீண்டகால இலக்குகளை பின்வருமாறு வகைப்படுத்த முடியும். உலகளாவிய போட்டிமிக்க பல்வேறுபட்ட ஆற்றல்களைக் கொண்ட இலங்கை ஊழியர் படையணியை கட்டியெழுப்புதல். தொழிலின்மையை குறைத்தல், ஒழுங்கமைக்கப்பட்ட பூரணமான தொழில் சந்தை தகவல் தளமொன்றை தயாரித்தல் போன்ற விடயங்களைக் குறித்தும் இந்தத் திணைக்களம் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது.

## 12. திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கு பிரிவுகளின் பங்களிப்பு

- **பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவைப் பிரிவு ( PES )**

**பின்னணி**

அரசாங்க மற்றும் தனியார் துறையின் இணைந்த கருத்திட்டமொன்றாக

இல.AP /03/0874/130/23EPD/464 மற்றும் 2003.10.15 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தொழில்வாய்ப்பு சேவை நிலைய வலையமைப்பு (தொழில் இல்லம்) 2003 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தேசிய வேலைவாய்ப்புக் கொள்கையின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் இந்த நிறுவனம் பரந்த அளவில் அடைந்துகொள்ள முடியுமான கணினித் தொகுதியொன்றினூடாக அனைத்து நிலையங்களும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டன. ஆரம்பத்தில் வெளிநாட்டு நிதியுதவி கருத்திட்டமொன்றாக செயற்படுத்தப்பட்ட இது 2007.01.31 வரை நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சினால் 2007.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இல. 2/2007 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய இலங்கை தொழில் இல்லம் என வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவுசெய்யப்பட்டது.

2010 ஆம் ஆண்டு அந்த விடயப் பரப்பு தொழில் உறவுகள் மற்றும் உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சின் கௌரவ அமைச்சரால் தொழில் இல்லத்தை மறுசீரமைத்து சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் 03/2011 மற்றும் 2011.02.15 ஆம் திகதிய விஞ்ஞாபனத்தின் பிரகாரம் தொழில் இல்லத்தை மறுசீரமைப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுக்கு 2011.05.12 ஆம் திகதிய தீர்மானத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டது.

6/2011 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு கிடைக்கப்பெற்ற தீர்மானத்தின் பிரகாரம் Job Net என வரையறுக்கப்பட்ட கம்பனியின் கீழ் காணப்பட்ட மாவட்ட தொழில் இல்லம் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் திணைக்களத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாவட்ட பொதுமக்கள் தொழில் சேவை நிலையத்திற்குச் சொந்தமாக இருந்த பௌதீக வளங்களும் சுவீகரிக்கப்பட்டன. திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்துகொண்டு இவ்வாறு நிறுவப்பட்ட பொதுமக்கள் வேலைவாய்ப்பு நிலையம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் “மாவட்ட வேலைவாய்ப்பு மையம்” எனும் பெயரில் மாவட்ட செயலகங்களை தளமாகக் கொண்டு சேவைகளை வழங்கிவருகின்றது. இலங்கையின் ஊழியர் படைக்கு தனியார் துறையில் பயனுள்ள தொழில் வாய்ப்புக்களை வினைத்திறனுடன் வழங்கி மாவட்ட செயலகங்களை தளமாகக் கொண்டு இயங்கி அதன் நோக்கங்களை அடைந்துகொள்ள

நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் திணைக்கள மறுசீரமைப்பின் போது இந்த மாவட்ட தொழில்வாய்ப்பு மையத்தை சர்வதேச மட்டத்திலான பொதுமக்கள் தொழில்வாய்ப்பு மையமாக (PES) அடையாளப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

**தொழில்வாய்ப்பு மையங்களின் வலையமைப்பு**









பிரதான அலுவலகம்
9 ஆம் மாடி,
செத்சிரிபாய இரண்டாம் கட்டம்
பத்தரமுல்லை.

தொழில் வாய்ப்பு மையத்தின் செயன்முறை

தொழிலை எதிர்பார்த்துள்ளவர்கள்

பதிவு
பயிற்சி நிறுவனங்கு அனுப்புதல்
ஆலோசனை வழங்குதல்
தொழில் வழிகாட்டலில் ஈடுபடுத்தல்

தொழில் வழங்கும் நிறுவனங்கள்

- பதிவு
- தொழில் வெற்றிடம்
- சேவைக்காலப் பயிற்சி /On The Job Training
- தொழில் சந்தை

தொழில் வாய்ப்பு மையம்

தொழில் பொருத்தப்பாடு

- ஆலோசனை தேவகள்
- பயிற்சித் தேவைகள்
- தகைமை மதிப்பீடு
  -Career Tests/ Selection

இல்லை

ஆம்

தொழிலில் ஈடுபடுத்தல்

தொழில் வழிகாட்டல்

- **மாவட்ட தொழில் நிலையங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்,**
  - தொழில் எதிர்பாரத்துள்ளவர்களை பதிவு செய்தல்
  - வெற்றிடங்கள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்
  - நிறுவனங்களிலுள்ள வெற்றிடங்களை தேடிப்பார்த்து நடவடிக்கை எடுத்தல்
  - தொழில் எதிர்பார்த்துள்ளவர்களின் தொழில் வெற்றிடங்கள் தொடர்பில் ஆவணங்களைத் தயாரித்தல்
  - நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் தொழில் எதிர்ப்பார்த்துள்ளவர்களின் தகைமைகளை உறுதிப்படுத்தல்
  - தொழில்களை ஒப்பீடு செய்தல் மற்றும் நேர்முகப் பரீட்சைகளுக்கு ஆற்றுப்படுத்தல்
  - தொழில்களில் ஈடுபடுத்தல் மற்றும் பின்னூட்டம் செய்தல்
  - தொழில் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்
  - பயிற்சிக்கான வசதிகளை செய்தல்
  - தொழில் நிலமைகள் தொடர்பில் புள்ளிவிபரத் தரவுகளை சேகரித்தல் மற்றும் வெளியிடுதல்
  - வெளிநாட்டு தொழில் சந்தர்ப்பங்களுக்கு வழிகாட்டுதல்
  - மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்து நடாத்துதல்

**மாவட்ட தொழில் நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள்**

| தொ.இல | மாவட்டம் மற்றும் அமைவிடம் | தொ.இல | மாவட்டம் மற்றும் அமைவிடம் |
|---|---|---|---|
| 01 | கொழும்பு மாவட்ட செயலகம் | 14 | கிளிநொச்சி மாவட்ட செயலகம் |
| 02 | கம்பஹா மாவட்ட செயலகம் | 15 | மட்டக்களப்பு மாவட்ட செயலகம் |
| 03 | களுத்துறை மாவட்ட செயலகம் | 16 | அம்பாறை மாவட்ட செயலகம் |
| 04 | கண்டி மாவட்ட செயலகம் | 17 | திருகோணமலை மாவட்ட செயலகம் |
| 05 | மாத்தளை மாவட்ட செயலகம் | 18 | குருநாகல் மாவட்ட செயலகம் |
| 06 | நுவரெலியா மாவட்ட செயலகம் | 19 | புத்தளம் மாவட்ட செயலகம் |
| 07 | காலி மாவட்ட செயலகம் | 20 | அனுராதபுரம் மாவட்ட செயலகம் |
| 08 | மாத்தறை மாவட்ட செயலகம் | 21 | பொலனறுவை மாவட்ட செயலகம் |
| 09 | தங்காலை பிரதேச செயலகம் | 22 | பதுளை மாவட்ட செயலகம் |
| 10 | யாழ்ப்பாண மாவட்ட செயலகம் | 23 | மொணராகலை மாவட்ட செயலகம் |
| 11 | மன்னார் மாவட்ட செயலகம் | 24 | இரத்தினபுரி மாவட்ட செயலகம் |
| 12 | வவுனியா மாவட்ட செயலகம் | 25 | கேகாலை மாவட்ட செயலகம் |
| 13 | முல்லைத்தீவு மாவட்ட செயலகம் | | |
| | | | |

- **மாவட்ட தொழில் நிலையங்கள் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்கங்கள்**

    - மாவட்ட மட்டத்தில் எமது நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள, அவ்வாறே, மாவட்டத்தின் ஏனைய தொழில் எதிர்ப்பார்த்துள்ளவர்கள் மற்றும் தொழில் வழங்கும் நிறுவனங்கள் ஒரே இடத்தில் சந்தித்தில்.
    - ஏற்புடைய/பிரதேச தொழில் எதிர்ப்பார்கையுள்ளவர்களை பதிவு செய்வதன் மூலம் தரவுத் தளத்தை இற்றைப்படுத்தல்.
    - தொழில் எதிர்ப்பார்கையுள்ளவர்களுக்கு இந்த தொழில் சந்தை ஊடாக தற்போதைய உழைப்புச் சந்தை, வேலை உலகம் தொடர்பில் அறிவூட்டல்.
    - தொழில் சந்தை மூலம் அதற்காக பங்கேற்பவர்களை தொழில் வழங்கும் நிறுவனங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளை தொழில்மயப்படுத்தல்.
    - தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
    - தனியார் துறையிலுள்ள தொழில்கள் தொடர்பில் நேர்மறையான சிந்தனைப் போக்கை ஏற்படுத்தல்.
    - தொழிற் பயிற்சி நிறுவனங்கள் தொடர்புபடுத்தி தொழில் எதிர்ப்பார்கையுள்ளவர்களுக்குத் தேவையான பயனுள்ள பயிற்சி சந்தர்ப்பங்களை அறிமுகம் செய்தல் மற்றும் அவற்றில் ஈடுபடுத்தல்.
    - சுயதொழில் மற்றும் ஜீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உதவி வழங்கும் நிறுவனங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் சுயதொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
    - தனது நிறுவனத்தில் காணப்படும் தொழில் சந்தர்ப்பங்கள் மற்றும் தொழில் எதிர்ப்பார்கையுள்ளவர்கள் தாங்கள் விரும்பும் தொழில் ஆற்றல்கள் தொடர்பில் பொதுமக்களை அறிவூட்டுவதற்கு அவ்வாறு தொழில் வழங்கும் நிறுவனங்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குதல்.

## • தொழில் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டுப் பிரிவு

தொழில் உருவாக்கத்திற்குத் தேவையான மனிதவளத்தினுள் காணப்படும் சக்திகள் மற்றும் ஆற்றல்களை அடையாளம் காணல் மற்றும் அவர்களது பெறுமானங்களை பயனுள்ள அபிவிருத்தியை நோக்கி திசைமுகப்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குவது தொழில் உருவாக்க ஊக்குவிப்புப் பிரிவினால் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை விவசாய நாடு என்ற ரீதியில் தற்போதைய இளைஞர் சமுதாயம் ஏனைய துறைகள் குறித்து கூடிய ஈடுபாடு காட்டிய போதிலும் அதற்கான சந்தர்ப்பங்கள் குறித்து போதிய அறிவைப் பெற்றிருக்கவில்லை. விவசாயத் துறையில் ஏற்பட்டுள்ள புதிய தொழில், தொழில் சந்தர்ப்பங்கள் மற்றும் வியாபார சந்தர்ப்பங்கள் தொடர்பில் இளைஞர்கள் பெற்றுள்ள அறிவு திருப்திகரமான மட்டத்தில் இல்லை.

இந்த சந்தர்ப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு தொழிலற்ற இளைஞர் சமூகத்தை பொருத்தமான தொழில்களில் ஈடுபடுத்தல், இளைஞர் சமுதாயத்தின் தகைமைகளின் அபிவிருத்தி மற்றும் முறையற்ற துறையின் அபிவிருத்தியினூடாக தொழில் முயற்சியாளர்களை கட்டியெழுப்புவதற்காக வலுவூட்டுவதும் இந்தப் பிரிவின் முக்கிய செயற்பாடாகும்.

## ➢ தொழில் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டுப் பிரிவினால் ஆரம்பம் முதல் இதுவரையில் வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு

- தொழில் குழு நிகழ்ச்சித்திட்டம்
- தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம்
- தனியார் துறையில் தொழிலில் ஈடுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம்
- சுயதொழிலுக்கு ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம்
- தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்
- பூங்கா அலங்கார நிகழ்ச்சித்திட்டம்
- தேவைக்கேற்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
- தொழில் நிலையம் (தற்போதுள்ள தொழில்களில் ஈடுபடுத்தல்) நிகழ்ச்சித்திட்டம்
- தொழில் சவாலை வெற்றிகொள்ளல் நிகழ்ச்சித்திடடம்
- மாற்றுத்திறனாளிகளை தொழிலில் ஈடுபடுத்தும் நிகழ்ச்சித்திடடம்

இந்த நிகழ்ச்சித்திட்டம் இலங்கை பூராகவும் உள்ள மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் தற்போதுள்ள தொழில் வாய்ப்புச் சந்தர்ப்பங்களை ஊக்குவித்தல் மற்றும் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி நாடு பூராகவும் பரந்துள்ள சேவைப் பெறுநர்களுக்கு சிறந்த நன்மைகளை வழங்குதல்.

- **தொழில் குழு நிகழ்ச்சித்திட்டம்**

பிரதேச செயலக மட்டத்தில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்யும் இளைஞர் சமுதாயத்தை ஒன்றுதிரட்டி 05 நாள் மென்திறன்கள் அபிவிருத்தி பயிற்சியை வழங்குதல், பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் குழுவினரை தொழிலில் ஈடுபடுத்துவதற்கு சந்தர்ப்பத்தை வழங்கி தொழில் சமூகமாக அவர்களை தொழிலொன்றைப் பெற்றுக்கொள்ளும் வரை தடுத்து வைத்து நிறுவனமயப்பட்ட பயனுள்ள வேலை உலகத்தை நோக்கி ஊக்கப்படுத்தும் செயல்முறை ரீதியான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாகும்.







கொழும்பு

- ## பிரதேச தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டம்

பிரதேச செயலக மட்டத்தில் பாடசாலை விட்டுச் சென்ற 50 மாணவர்களின் பங்கேற்புடன் அவர்களை தொழில்களில் ஈடுபடுத்தும் நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தி இரு தரப்பினரையும் சந்திக்கச் செய்து பின்னூட்டல் செய்யப்படுகின்றது.



## தனியார் துறையில் தொழிலில் ஈடுபடுத்தல்

பிரதேச செயலகங்களுக்கு வருகைதரும் தொழில் எதிர்பார்த்துள்ளவர்களை பதிவுசெய்து பின்னர் அவர்களை தொழில் வழங்கும் நிறுவனங்களுக்கு அனுப்புதல். இதன் போது விசேடமாக தெரிவுசெய்யப்பட்ட தனியார் துறை நிறுவனங்களின் ஆரம்ப ஊக்குவிப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்தி அவர்களை தொழிலில் ஈடுபடுத்தும் நடவடிக்கை மேற்கெள்ளப்படுகின்றது. பயிற்சி ஏற்புடைய நிறுவனத்தினால் வழங்கப்படுவதோடு, பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்யும் பயிலுநர்களுக்கு திணைக்களத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சித்திட்டம் பிரதானமாக ஆடை உற்பத்தி துறையில் பல்வேறுபட்ட பிரிவுகளுக்குத் தேவையான உழைப்பு வழங்கைள பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.






- **தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

சுயதொழிலில் ஈடுபடுவதற்கு ஆர்வமுள்ள சுயதொழிலாளர்கள், தற்போது சுயதொழிலொன்றை ஆரம்பித்து தோல்வியை சந்தித்துள்ள அல்லது முறையற்ற விதத்தில் மேற்கொண்டுள்ளவர்களை ஒன்றுதிரட்டி அவர்களது தொழில் முயற்சி சிந்தனைகளை விருத்தி செய்தல், சந்தைப்படுத்தல் உத்திகளை அறிமுகம் செய்தல், முகாமைத்துவம், பொதுமக்கள் தொடர்பாடல் பற்றி அறிவூட்டல், வியாபார நடவடிக்கைகள் பற்றிய சட்டரீதியான அறிவூட்டலை வழங்குவதனூடாக வெற்றிகரமான தொழில் முயற்சியாளர் ஒருவரை உருவாக்கும் நோக்கத்துடன் இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. 4 நாட்களைக் கொண்ட செயலமர்வைக் கொண்ட இந்த நிகழ்ச்சித்திட்டம் சுயதொழிலுக்கு ஊக்குவிக்கும் நடவடிக்கைக்கு அப்பால் சென்று வியாபாரத் துறையை அடிப்படையாகக் கொண்ட புதிய தொழில் சந்தர்ப்பங்களை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றன.

தற்போது இந்தப் பயிற்சினூடாக உருவாக்கப்பட்ட வெற்றிகரமான தொழில் முயற்சிச் சமூகமொன்றாக நாடு பூராகவும் உருவாக்கப்பட்டுள்ளனர். அதிகமானவர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



- **தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**






பதவி ஸ்ரீபுரம்





- **பூங்கா அலங்கரிப்பு நிகழ்ச்சித்திட்டம்**





தன்கொட்டுவ



வலல்லாவிட்ட வெலிகம

இந்த நிகழ்ச்சித்திட்டம் வெறுமனே, தொழில்நுட்ப பயிற்சிக்கு அப்பால் பரந்த குறிக்கோளுடன் மேற்கொள்ளப்பட்டுவரக்கூடிய நிகழ்ச்சியொன்றாகும். பூங்கா அலங்கார துறையில் பல்வேறுபட்ட தொழில் ஊழியர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் பொருட்டு ஒழுங்கமைக்கப்பட்ட தொழில் நிர்மாண ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டாகும். இதுவரையில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் பூங்கா முகாமைத்துவத் துறையில் ஊழியர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் பலர் உருவாக்கப்பட்டுள்ளனர். அத்தோடு அவர்களுக்கு ஊடாக பல தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

- **தேவைப்பாட்டின் மீதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

பிரதேச செயலக மட்டத்தில் அந்தந்த பிரதேசங்களை அடையாளம் கண்டு தெரிவுசெய்யப்பட்ட சுயதொழிலொன்றுக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சியை வழங்கி தொழிலொன்றாக அந்தந் துறையில் ஈடுபடுவதற்குத் தேவையான தொழில்நுட்ப பயிற்சியை வழங்கி பயனாளிகளுக்கு அந்தத் தொழிலில் ஈடுபடுவதற்கு தேவையான வசதிகள் வழங்கப்பட்டன. அத்தோடு, விசேடமாக இந்தப் பயிற்சி செயலமர்வின் மூலம் சுதேச கைப்பணி மற்றும் மனைக் கைத்தொழிலுடன் இணைந்த அதிகமான தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

- ## நூறு தொழில் வாய்ப்புக்கள் நிகழ்ச்சித்திட்டம்

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர் சமுதாயத்தை தொழில்களில் ஈடுபடுத்தும் நோக்கில் நடாத்தப்படும் மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாகும். இதன் போது நேர்முகப் பரீட்சை மூலம் 100 பேர் தெரிவுசெய்யப்பட்டடு அவர்களை தொழில்களுக்கு தயார்படுத்தல் மற்றும் விருத்தி செய்துகொள்ள வேண்டிய ஆற்றல்கள் பற்றியும் அறிவூட்டி அடிப்படையான எண்ணப்பாட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்தி தொழில் வழங்கும் நிறுவனங்களை அழைத்து தொழில் தேடுனர்களையும் அந்த் நிறுவனங்களையும் சந்திக்க வைப்பதன் மூலம் தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.





கடுவளை

- **தொழில் சவாலை வெற்றி கொள்ளல் நிகழ்ச்சித்திட்டம்**

ஏதேனும் பிரதேசமொன்றில் இருக்கும் தொழில் சவாலை எதிர்நோக்கும் குழுவொன்றை அடையாளம் கண்டு அவர்களுக்கு சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கு ஊக்கமளித்தல், நிறுவனங்களில் தொழில்களுக்கு அனுப்புவதற்காக நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டமாகும்.



- **சுயதொழில்களில் ஈடுபடுவதற்கு ஊக்கப்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

செய்தித்தாள்களில் கட்டுரைகளை எழுதுதல், புகைப்படம் எடுத்தல், இணைய வழியில் நிதியீட்டுதல், காப்புறுதி முகவர், வானசாஸ்திரம் போன்ற சுதந்திரமான தொழிலாளர்களாக தொழில்களில் ஈடுபடுவதற்கு ஊக்கப்படுத்தல் மற்றும் தகவல்களை வழங்குதல், அறிவூட்டல் என்பன இந்தச் செயலமர்வினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. சுயாதீன தொழிலாளியாக வருமானத்தை ஈட்டும் வழியொன்றை அமைத்துக்கொள்வதற்கு வழிகாட்டுவதன் மூலம் தொழிலின்மைக்கு தீர்வுகாணல்.

- **மாற்றுத்திறனாளிகளை தொழில்களில் ஈடுபடுத்தும் வேலைத்திட்டம்**

பிரதேச செயலக மட்டத்தில் மாற்றுத்திறனாளிகளை இனங்கண்டு வலுவூட்டும் செயலமர்வுகளை நடாத்தி வருமான ஆதாரங்களை அறிமுகம் செய்தல், குறிப்பாக அவர்களின் திறமைக்கு ஏற்ப தனியார் துறையில் அடையாளம் காணப்பட்ட தொழில் வாய்ப்புகளுக்கு வழிகாட்டுதல், சுயதொழில்களுக்கான பயிற்சிகள் மற்றும் ஏனைய வசதிகளை ஒருங்கிணைத்தல்.

கருத்திட்டத் தயாரிப்பின் போது புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி, ஏற்கனவே உள்ள வேலைவாய்ப்பைத் ஊக்குவித்தல் மற்றும் பயனாளிகளுக்கு வழிகாட்டுதல். இவற்றின் மூலம் பொருளாதாரத்தில் வேலையின்மை பிரச்சினைக்கு நீண்டகால நிலையான தீர்வுகளை வழங்குவதை இந்த பிரிவு எப்போதும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- **தொழில் முயற்சி குழு அமைத்து பேணிவரல்**

சிறுதொழில் முயற்சியாளர்களின் அபிவிருத்திக்கு உதவுவதற்காக திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தரின் உதவியின் கீழ் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கும் ஒருவர் என்ற வகையில் தொழில் முயற்சியாளர்களைக் கொண்ட தொழில் முயற்சியாளர் குழு அமைக்கப்பட்டுள்ளது. பல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இச்சங்கங்கள் வெற்றிகரமாகச் செயற்படுவதைக் காணலாம். தொழில்முயற்சியாளர்கள் முன்னேற வேண்டிய நிதி, தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு பயிற்சி போன்ற தேவைகள் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தரினால் தொடர்ந்தும் ஒருங்கிணைப்புச் செய்யப்படும். இந்த சங்கத்தை பிரதேச, மாவட்ட மற்றும் தேசிய அளவில் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள பல நிறுவனங்கள் தொழில் முயற்சியாளர்களின் மேம்பாட்டிற்காக உழைத்து வருகின்றன, மேலும் இந்த திட்டத் துறையின் நோக்கம் வேலைவாய்ப்பை உருவாக்குவதாகும். அதாவது, இந்த சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களை இந்த வசதிகள் மூலம் ஊக்குவிக்கப்படுவதோடு, ஒரு நிறுவனத்துடன் தொடர்புடைய மேலும் பலருக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படுகிறது. அதாவது புதிய வேலை வாய்ப்பு உருவாக்கம். அதுவே தேசிய முக்கியத்துவமாகவும் காணப்படுகின்றது. அதன் முதல் கட்டத்தை திணைக்களம் தற்போது வெற்றிகரமாக அடைந்துள்ளது.

- **தொழில் முயற்சி சந்தைகள் / தொழில் முயற்சி கண்காட்சிகள்**

தொழில் முயற்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், தேவைக்கேற்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், சுயதொழிலுக்கு ஊக்குவிக்கும் நிகழ்ச்சிட்டத்தின் ஊடாக பயிற்சியைப் பெற்று தனக்கே உரிய வியாபாரமொன்றை ஆரம்பித்துள்ள வியாபாரிகளுக்கு தமது உற்பத்திகளை விற்பனை செய்துகொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்குதல் மற்றும் அவர்களது உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பை வழங்கி அவற்றை விரிவுபடுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாகும்.

- **தொழில் முயற்சி விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

பல விசேட தொழில்முயற்சி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு, அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் உபகரணங்களை வழங்குவதன் மூலம் தொழில் முயற்சியாளர் குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை ஹிங்குராங்கொட மலர்க் கிராமங்களுக்கு விசேட தொழில் முயற்சி பயிற்சி மற்றும் வழிகாட்டல்களை வழங்கி மனிதவள உத்தியோகத்தர்களின் மேற்பார்வையில் 250 இற்கும் மேற்பட்ட பூக்கலை தொழில்முயற்சியாளர்களின் அங்கத்துவத்துடன் “சிரிலிய மலர் “

சங்கத்தை நிறுவி பராமரித்து வருகின்றமை இதற்கு உதாரணமாகும். இந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றும் பல நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. இவை இப்போது மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் தலைமை அலுவலக பயிற்சியாளர்களின் குழுவால் ஒழுங்கமைக்கப்பட்டு மற்றும் தேவைப்படும் போது வளவாளர்கள் அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## மனிதவள முகாமைத்துவ மற்றும் வெளிநாட்டு உறவுகள் பிரிவு

திணைக்களத்தில் மனிதவள முகாமைத்துவ 35 ம் வெளிநாட்டு உறவுகள் பிரிவு 2020 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நிறுவப்பட்டது. இந்தப் பிரிவின் கீழ் இயங்கிவரும் உப பிரிவுகள்.

01. தேசிய மனிதவள மற்றும் தொழில் வாய்ப்பு கொள்கைப் பிரிவு

02. வெளிநாட்டு உறவுகள் பிரிவு

03. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

திணைக்களத்தின் முன்னோக்கிய பயணத்திற்கு மனிதவள முகாமைத்துவ மற்றும் வெளிநாட்டு உறவுகள் பிரிவினால் இதுவரையில் வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு.

01. தேசிய மனிதவள மற்றும் தொழில்வாய்ப்பு கொள்கைப் பிரிவு

(i) இலங்கையில் உழைப்புச் சந்தையின் தகவல் தளமொன்றை நிறுவுவதற்கு ஏற்புடைய அடிப்படையான நடவடிக்கைகளை ஆரம்பித்தல். இது 2023 ஆம் ஆண்டில் நிறைவுசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் ஜனாதிபதி அலுவலகத்தினால் நிறுவப்பட்டு தற்போது எமது திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள SMART SRI LANKA மென்பொருள் தொகுதியைப் பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞானப் பிரிவு மற்றும் ICTA நிறுவனம் என்பன இதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குவதற்கு இணக்கத்தை தெரிவித்துள்ளன.

(ii) அத்தோடு, தேசிய மனிதவள மற்றும் தொழில் வாய்ப்பு கொள்கைக்கு அமைய, தொடர்புபட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்கள் அடங்கலாக 37 அமைப்புகளை அடையாளம் கண்டு அந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி, தேவைப்பாடுகளுக்கு அமைய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுகின்றன.

- இதற்கு ஏற்புடையதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் eGN கருத்திட்டத்தின் கீழ் தரவுகளைப் பெற்றுக்கொள்ள இயலுமான வகையில் 2021.11.24 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

02. தகவல் தொழில்நுட்ப பிரிவினால் வழங்கப்பட்ட பங்களிப்பு

- திணைக்கள Web இணையத்தளம், You Tube அலைவரிசை, Face Book Page ஐ மீளமைத்து குறுகிய காலத்திற்குள் பொதுமக்களிடம் பிரபல்யப்படுத்தப்பட்டது.
  2021 நவம்பர் மாதம் அளவில்,
  Web இணையத்தளம் - 60 000 பேர் பயன்படுத்தியுள்ளனர். (www.dome.gov .lk)
  You Tube அலைவரிசை - 2530 Subscribe செய்யப்பட்டுள்ளன. (Inspired Career) – (https://www.youtube.com/c/Inspird career)
  Face Book Page இன் Followers 7700 ஆகும்.(https://www.facebook.com / dome.gov.official)
- திணைக்களத்தின் You Tube அலைவரிசையை மீண்டும் தயாரித்து புதிய கோணத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க, “ Yes We Can” எனக் காணப்பட்ட பெயர் “Inspired Career” ஆக மாற்றியமைத்து புதிய கோணத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

03. வெளிநாட்டு அலுவல்கள் பிரிவு

- சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட அங்கவீனர் சமூகத்தின் தொழில்முயற்சி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் வடக்கு மாகாண ஆரம்ப நிகழ்ச்சித்திட்டம் 2021.02.17 ஆம் திகதி முதல் 2022.03.31 ஆம் திகதி வரை நடைப்பெற்றது.

மேலும், இந்தப் பிரிவின் முன்னோக்கிய மூலோபாயத் திட்டங்களாக, உழைப்புச் சந்தை தகவல் தளமொன்றை நிறுவுதல் மற்றும் மனிதவள முகாமைத்துவ மற்றும் தொழில்வாய்ப்பு கொள்கையை வலுவாக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு, தொழில்வாய்ப்புக் கொள்கை மற்றும் மனிதவள அபிவிருத்திக்கு ஏற்புடைய உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்ச்சியான உறவுகளை கட்டியெழுப்பி நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



## திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

1. திட்டமிடல் மற்றும் முன்னேற்ற செயற்பாட்டுப் பிரிவு

திட்டமிடல் மற்றும் முன்னேற்றச் செயற்பாட்டுப் பிரிவு என்பது திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் கீழ் இயங்கிவரும் ஒரு துணைப் பிரிவாகும் மற்றும் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி) இன் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. ஒரு உதவிப் பணிப்பாளர், ஆறு மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் எட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரைக் கொண்ட ஆளணி காணப்படுகின்றது.

இப்பிரிவின் முக்கிய பணிகள், திணைக்களத்தின் அடிப்படைத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் மாவட்டச் செயலாளர் மற்றும் பிரதேச மட்டத்தில் பணிபுரியும் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகியவற்றுக்கு இடையேயான உறவைப் பேணுதல் என்பனவாகும். அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து நிதி மற்றும் பௌதீக முன்னேற்றங்களைப் பெற்றுக்கொள்ளல், பகுப்பாய்வு செய்தல், முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் தேவையான தரப்பினருக்கு சமர்ப்பிப்பதன் மூலம் திணைக்களத்தின் முகாமைத்துவத்திற்கு உதவுதல்.

**மேற்கொள்ளப்படும் பணிகள்**

.

1. திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளின் பங்களிப்புடன் திணைக்களத்திற்கான மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல் (Strategic Plan)

2. திணைக்களத்தின் மூலோபாயத் திட்டத்திற்கு இணங்க அனைத்துப் பிரிவினரின் பங்களிப்புடன் வருடாந்த செயற்திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதற்கேற்ப மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த இலக்குகளை வழங்குதல்.
3. திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதியைப் பெறுதல்.
4. திணைக்களத்தின் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.
5. வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்.
6. மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள திணைக்கள உத்தியோகத்தர்களை வருடாந்தம் மதிப்பீடு செய்தல்.
7. பின்வரும் கூட்டங்களை நடத்துதல், கூட்டங்களில் கலந்துகொள்ளல், அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அந்தத் தகவலைப் பரப்புதல்.

- இருவாரக் கூட்டம் - பதவிநிலை உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன்
- மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களின் கூட்டங்கள் - நேரடியாக மற்றும் இணைய வழியில்
- அரையாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் - மாவட்டங்களில் இணைக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள்
- மாவட்ட மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் - ஒவ்வொரு மாவட்டத்திலும் இணைக்கப்பட்டுள்ள திணைக்கள உத்தியோகத்தர்கள்
- அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெறும் மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டம்
- அமைச்சின் கௌரவ அமைச்சர் தலைமையில் நடைபெறும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
- முகாமைத்துவ கணக்காய்வுக் குழு கூட்டம் - திணைக்களத்தில்
- முகாமைத்துவ கணக்காய்வுக் குழு கூட்டம் - அமைச்சில்

8. மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களோடு இணைக்கப்பட்டுள்ள திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தின் தரவுத்தளத்தை பராமரித்தல்.



**தொழில் சந்தை தகவல் பிரிவு**

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் கீழ் இயங்கும் தொழில் சந்தை தகவல் பிரிவு, பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி) அவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தப் பிரிவில் பிரதிப் பணிப்பாளர் மற்றும் பதினொரு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றனர்.

தொழில் சந்தை தகவல் பிரிவின் முக்கிய நோக்கம் தொழில் சந்தை மற்றும் தொடர்புடைய மனித வளங்கள் பற்றிய அறிவியல் ஆராய்ச்சி, ஆய்வுகள் மற்றும் சம்பவக் கற்கைகளை மேற்கொள்வதாகும். மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள், மனித வள அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன், தலைமை அலுவலகத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களினால் இந்த ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த ஆண்டில் திணைக்களத்தினால் ஆற்றப்பட்ட முக்கிய பணிகள் பின்வருமாறு:

1. **மாதாந்த அறிவுத் துலங்கள் அமர்வுத் தொடர்**

தேசிய பொருளாதாரத்தில் தொழிலாளர் சந்தை மற்றும் தொழிலாளர் வழங்கலின் பல்வேறு துறைகள் குறித்து பாட நிலை அறிஞர்களுடன் மாதாந்த கலந்துரையாடல்களை

நடத்துதல் மற்றும் அதன் மூலம் தொழிலாளர் சந்தை பிரச்சினைகளை கண்டறிந்து கொள்கை முன்மொழிவுகளை இனங்காணல்.

1. **சம்பவக் கற்கைகளை நடத்துதல்** (Case Study)

பொருளாதார ரீதியாக நிலையான தயாரிப்புகள் மற்றும் சேவைகள் பற்றிய ஆழமான ஆய்வுகளை மாதாந்த அடிப்படையில் நடத்துதல் மற்றும் அறிவியல் ரீதியாக தகவல்களைப் பரப்புதல்.

2. **தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளில் தனிப்பட்ட ஆராய்ச்சி**

தொழிலாளர் சந்தையில் உற்பத்தி குறுகிய கால ஆராய்ச்சியை மேற்கொள்வது மற்றும் விஞ்ஞான ரீதியாக தகவல்களை பரப்புதல்.

## நிர்வாகப் பிரிவு

திணைக்களத்தின் செயற்பணியை நிறைவேற்றும் பொருட்டு உள்ளக நிர்வாக செயன்முறைக்கு பங்களிப்புச் செய்வதனூடாக விசேட செயலாற்றுகையை அடைந்துகொள்வதற்காக திணைக்களத்தின் உயர் முகாமைத்துவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு நிறுவன நடவடிக்கைகள் மற்றும் பொது நிர்வாக நடவடிக்கைகளை வழிநடாத்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் மேம்படுத்தல் நிர்வாகப் பிரிவின் பிரதான பொறுப்பாகும். அவ்வாறே, திணைக்களத்தின் தரத்தைப் பேணிவருவதற்காக பிரயோசனமான பௌதீக நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஏற்ற உயர் மட்டத்திலான ஆளணியைப் பேணிவரல் வேண்டும். பிரிவுகளுக்கு மத்தியில் சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல், ஆளணியின் நலன்புரி வசதிகளை உயர்த்துவதற்கு மற்றும் ஏனைய பிரிவுகளுக்குத் தேவையான ஒத்துழைப்பு சேவைகளை வழங்குவதும் நிர்வாகப் பிரிவின் பொறுப்பாகும்.

மேலும், உத்தியோகத்தர்களின் சுயவிபரக் கோவைகளை பராமரித்தல், பயிற்சித் தேவைப்பாடுகளை அடையாளம் காணல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உத்தியோகத்தர்களை அனுப்புதல், இடமாற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்தல், நாளாந்த தபால், ஆட்சேர்ப்பு, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு உள்ளிட்ட திணைக்கள தொழிற்பாட்டு நிர்வாக நடவடிக்கைகள், போக்குவரத்து நடவடிக்கைகள் என்பன இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

## நிதிப் பிரிவு

திணைக்களத்தின் நிதி நிர்வாகத்துடன் அனைத்து நடவடிக்கைகளும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.



## 13. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் உள்ள சவால்கள்

1. ஒரே பயனாளிகளின் குழுவிற்கு ஒரே நோக்கத்திற்காக சேவைகளை வழங்குவதற்காக வெவ்வேறு திணைக்களங்களில் உள்ள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதால் இருமுறைப்படுத்துதல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு மத்தியிலுள்ள வேலை புரிதலில் உள்ள முரண்பாடுகள்.
2. தொழில் வழிகாட்டல், வேலை உருவாக்கம் மற்றும் ஊக்குவிப்புக்கான நடுத்தர கால வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட வருடாந்த ஒதுக்கீடு காரணமாக விரிவான சேவைகளை வழங்குவதிலும் சேவை தரத்தை பராமரிப்பதிலும் சிரமம் ஏற்படல்.
3. அனைத்து திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் தகவல் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் முன்னேற்ற மதிப்பீட்டு முகாமைத்துவ தகவல் அமைப்பு இல்லாமலிருப்பது மற்றும் இதற்காக தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவாக உள்ளது.

இதனால் நாட்டின் அனைத்து உத்தியோகத்தர்களையும் ஒரு பொதுவான மேடைக்கு கொண்டுவருவதில் சிரமம் காணப்படுதல்.

4. உத்தியோகத்தர்களின் அறிவு, மனப்பான்மை மற்றும் திறன்களின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு போதுமான நிதி ஏற்பாடுகள் வழங்கப்படாமை.

மேற்குறிப்பிட்ட சவால்களுக்கு முகங்கொடுத்து நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கு இத்திணைக்களம் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கி வருவதுடன் எமது சேவைப் பெறுநர்களான இலங்கை மக்களுக்கு எமது சேவைகளை அதிகூடிய அளவில் பலனளிக்கும் வகையில் வழங்கப்படுகின்றது.

# நன்றி !





இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

இல. 9, பிலிப் குணவர்தன மாவத்தை, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.

දුරකථන අංකය - 0112186022
ෆැක්ස් අංකය - 0112187133
විද්‍යුත් තැපැල - info@dome.gov.lk
වෙබ් අඩවිය - www.dome.gov.lk